பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
25 08 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
2. மத்திய அரசுப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
3. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட கர்நாடாக அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
4. அனைத்து மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு எவ்வித பாகுபாடும் இன்றி தமிழக அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.
5. தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைஷ்ணவி அத்கர் - தாய்லாந்தின் **Pat Charin Cheapchandej**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இதனை நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

மத்திய அரசுப் பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், 25 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மத்திய அரசு ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக அளிக்க இத்திட்டம் வகை செய்வதாக தெரிவித்தார்.

ஓய்வூதியதாரரின் மறைவுக்குப் பின்பு அவரது குடும்பத்தினருக்கு 60 சதவீத ஓய்வூதியம் வழங்குவதற்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்களுக்கு மாதம்தோறும் 10 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகை வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் 23 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் பயன்பெறுவர்.

இத்திட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் இருந்து அமலுக்கு வரும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உயர் செயல்திறன் கொண்ட உயிரி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆராய்ச்சி – மேம்பாடு, தொழில்முனைவோருக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இத்திட்டத்தின் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான உயிரி தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் தொழில்நுட்ப மேம்பாட்டை துரிதப்படுத்துதல், உயிரி உற்பத்தியை வர்த்தகமயமாக்கல் மற்றும் பசுமை வளர்ச்சியை மீட்டுருவாக்கம் செய்தல் போன்ற அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இக்கொள்கை வழிவகுக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதனிடையே நாட்டின் வளர்ச்சியில் மத்திய அரசுப் பணியாளர்கள் பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை அளித்துள்ள ஒப்புதல், அரசுப் பணியாளர்களின் நிதிப் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசுப் பணியாளர்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உயிரி தொழில்நுட்பம் தொடர்பான மத்திய அமைச்சரவையின் முடிவு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு பயனளிக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் 3 திட்டங்களை ஒருங்கிணைத்து விஞ்ஞான்தாரா என்ற பெயரில் செயல்படுத்தும் வகையில் 10 ஆயிரத்து 579 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அறிவியல் தொழில்நுட்பம், திறன் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப பயன்பாடு ஆகிய 3 துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் இதில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக மாநில அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக அரசின் இத்திட்டத்திற்கு மத்திய ஜல்சக்தி அமைச்சகம் அனுமதி வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் விரிவான கடிதம் எழுதியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இத்திட்டம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட துறைசார்ந்த இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளதாகவும் திரு. துரைமுருகன் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2023-24ஆம் பாசன ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய நீரை திறந்துவிட கர்நாடக மாநிலத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதில் மாநில அரசு அனைத்து முயற்சிகள் மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.,

<<<<>>>>

ஜாதி வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு தமிழக முதலமைச்சர் செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் எண்ணங்களை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு உள்ளாட்சி பிரதிநிதிகள் செயல்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

மாநில அரசால் தொடங்கப்பட்ட திட்டப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் அறிவுறுத்தியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 2 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய திடடப் பணிகளை அவர் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

நகரின் ஒருசில பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

மன்னார்வளைகுடா, தென்தமிழக கடலோரப் பகுதிகளில் வரும் 28ஆம் தேதி வரை பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

இருவரிச் செய்திகள்

ருமேனியா அதிபர் தேர்தலில் அந்நாட்டு சோஷியல் ஜனநாயகக் கட்சித் தலைவர் திரு. **Marcel Ciolacu** வேட்பாளராக போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

பிரேசில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Mauro Vieira** நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

-------------

காஸாவில் போர்நிறுத்தத்தை கொண்டு வருவதற்கான புதிய சமரச திட்டங்கள் குறித்து ஹமாஸ் அமைப்புடன் கெய்ரோவில் ஆலோசனை நடைபெற்று வருகிறது.

-------------

மாலியில் அண்மையில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக தேசிய பேரிடராக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

-------------

திரிபுராவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மாணிக்சாகா தெரிவித்துள்ளார்.

-------------

ஜம்மு-கஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் திருவாலங்காட்டில் வெடிபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்து குறித்து ஆட்சியர் மகாபாரதி நேற்று ஆய்வு செய்தார்

-------------

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

-------------

திருவாரூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில்விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு அமைக்கப்படும் விநாயகர் சிலைகளின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

-------------

தேனி முல்லைப்பெரியாறு அணை குறித்து தவறான தகவல்களை பரப்பி வருபவர்களைக் கண்டித்து அம்மாவட்டம விவசாய சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

-------------

திருவள்ளூரில் பெண்களின் உரிமைகள் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உறுதி செய்வதை வலியுறுத்தி 300க்கும் மேற்பட்ட பெண்கள் பேரணியாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலியில் உள்ள மீன்குட்டையில் குளிக்கச் சென்ற இரண்டு சிறார்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

-------------

கோவை விமான நிலைய விரிவாக்கப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அம்மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு உட்பட்ட கரும்புகளை தனியார் ஆலைகளுக்கு கொண்டு சென்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

-------------

விளையாட்டுச் செய்திகள்

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைஷ்ணவி அத்கர் - தாய்லாந்தின் **Pat Charin Cheapchandej**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

---------------

ஆசிய ஜூனியர் பேட்மிட்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

சீனாவில் உள்ள **Chengdu**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்று நடைபெறும் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், வியட்நாமின் **Nguyen Thi Thu Huygen**-ஐ எதிர்கொள்கிறார்.

----------------

ஜப்பானில் 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியின் அலைச்சறுக்குப் போட்டியில் பங்கேற்க இந்திய ஆடவர் மற்றும் மகளிர் குழு தகுதி பெற்றுள்ளது.

மாலத்தீவில் நடைபெற்ற அலைச்சறுக்குப் போட்டியில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அவர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

----------------

**<<<<The End>>>>**